Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 74/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜான்சி | ஜாதி | : | |
| க/பெ | : | சத்தியகுமார் | தொழில் | : | செவிலியர், தனியார் மருத்துவமனை. |
| கிராமம் | : | சமத்துவபுரம், சீவல்சரகு | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் சீவல்சரகு சமத்துவபுரத்தில் குடியிருந்துகொண்டு செவிலியராக நான் தனியார் மருத்துவமனையில் பணியாற்றி வருகிறேன். கடந்த 15.07.2022 அன்று நான் திண்டுக்கல்லில் மருத்துவமனையில் வேலை செய்து கொண்டிருந்தபோது, இரவு 07.30 மணியைபோல சம்பவ இடத்தில் இருந்த நபர்கள் எனக்கு போன் செய்து மாலப்பட்டி அருகில் என் மகன்களுக்கு இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொன்னார்கள். எதிரி TVS Heavy duty என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், இரண்டு வாகனங்களும் மோதிக்கொண்டு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். என் இரு மகன்களுக்கும் காயம் ஏற்பட்டிருப்பதாக சொன்னார்கள். திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாக சொல்லியதன் பேரில் , என் மூத்த மகன் 16 வயதான யோகேஷ் பாண்டிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. என் சிறிய மகன் அஜய்க்கு இடது கால் உடைந்து காணப்பட்டது. மேல்சிகிக்கைச்சாக என் மூத்த மகனை மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி எனது மகன் யோகேஷ்பாண்டி அங்கு சேர்த்த இரண்டு மணி நேரத்தில் இறந்துவிட்டார். என் மகன்கள் முறையாக சென்றார்கள் என்றும், எதிரி கார்த்திக் மது அருந்திவிட்டு முறையாக வாகனத்தை ஓட்டி வராமல் தாறுமாறாக ஓட்டி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்று என்னிடம் கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த

கையொப்பத்துடன் கூடிய **புகார் மனு (அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது காயம்பட்ட மற்றொரு மகனை JCB தனியார் மருத்துவமனையில் ஒரு வார காலம் சிகிச்சையில் வைத்திருந்தோம். அவருக்கு காலில் அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த புகாரை யார் சொல்லி எங்கு வைத்து எழுதினீர்கள் என்றால் காவல்நிலையத்தில் நானும், என் அப்பாவும் சேர்ந்து எழுதினோம். அதற்கான தகவல் யார் சொன்னது என்று எனக்கு தெரியவில்லை. உங்களுக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். போன் மூலம் தான் தகவல் சொன்னார்கள். உங்களுடைய புகாரில் சம்பவத்தை யார் பார்த்தார்கள் என்றும், யார் உங்களுடைய மகன்களுக்கு உதவினார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 18 வயது பூர்த்தியடையாத உங்கள் இரு மகன்களுக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான்.

வண்டியின் உரிமையாளர், அவரது பெயர் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். உங்கள் மகன்கள் தான் வேகமாக சென்று எதிரே வந்த ஏதோ ஒரு வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. உங்கள் மகன்கள் ஓட்டிச்சென்ற வாகனம் தான் வேகமாக செல்லக்கூடிய வாகனம் என்றும், எதிரி ஓட்டி வந்த வாகனம் வேகமாக செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 74/2023**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயன் | ஜாதி | : | |
| த/பெ | : | கோபால் | தொழில் | : | ஏற்கனவே டிரைவராக இருந்தேன். தற்போது உடல்நிலை சரியில்லாதால் எந்த வேலைக்கும் செல்லவில்லை. |
| கிராமம் | : | சீவல்சரகு, சமத்துவபுரம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் சீவல்சரகு, சமத்துவபுரத்தில் குடியிருந்துகொண்டு வருகிறேன். ஏற்கனவே டிரைவராக வேலை செய்தேன். தற்போது உடல்நிலை சரியில்லாதால் எந்த வேலைக்கும் செல்லவில்லை. அ.சா.1 எனது மகள். வாகன விபத்தில் இறந்த யோகேஷ்பாண்டி எனது பேரன். வாகன விபத்தில் காயம்பட்ட அஜய் மற்றொரு பேரன். கடந்த 15.07.2022 அன்று இரவு 07.00-08.00 மணிக்குள் நான் செம்பட்டியில் இருந்தபோது அந்த இடத்தில் இருந்த நபர்கள் என் பேரன்கள் வாகனத்தில் கீழே விழுந்துவிட்டதாக தகவல் சொன்னதன் பேரில் நான் சென்று பார்த்தேன். சின்னாளபட்டி, நடுப்பட்டி கோயில் பக்கத்தில் விபத்து ஏற்பட்டிருந்த்து. நான் சென்று பார்த்தபோது யோகேஷ்பாண்டிக்கு தலையில் காயம் ஏற்பட்டிருநத்து. அஜய்க்கு இடது கால் உடைந்துவிட்டது. பக்கத்தில் இருந்த முள்ளில் இருந்தார். ஒரு TVS வாகனம் ஒன்று அந்த இடத்தில் நின்றது. விபத்து நடந்த அரை மணி நேரம் கழித்து என் பேரன்களை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லும் போதே நான் சம்பவ இடம் சென்று விட்டேன். எனது பேரன் யோகேஷ்பாண்டி மேல்சிகிக்கைச்சாக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பிறகு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனது மற்றொரு பேரன் அஜய் JCB மருத்துவமனையில் காலில் 3

இடத்தில் உடைந்துவிட்டதால் அதற்கு அறுவைசிகிச்சை செய்து 10 நாட்கள் உள்நோயாளியாக இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுக்கு யார், எப்படி தகவல் சொன்னார்கள் என்று போலிஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். பின்னிட்டு தான் நான் சென்றேன். விபத்தில் இறந்த ஒருவர் உங்களது பேரன் என்றால் சரிதான். உங்களுக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றும், உங்கள் மகள் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor